**செ. கு. எண்: 006** **நாள்: 10.01.2018**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **திரு. எடப்பாடி K. பழனிசாமி**

அவர்களின் அறிக்கை – 10 .1.2018

விழுப்புரம் மாவட்டம், **வீடூர் அணையிலிருந்து** பாசனத்திற்கு தண்ணீர் திறந்துவிடக் கோரி வேளாண் பெருமக்களிடமிருந்து எனக்கு கோரிக்கைகள் வந்துள்ளன. வேளாண் பெருமக்களின் வேண்டுகோளினை ஏற்று, விழுப்புரம் மாவட்டம், **வீடூர் அணையிலிருந்து** பாசனத்திற்கு **17.1.2018 முதல் 135 நாட்களுக்கு** மொத்தம் 169.40 மி.க.அடி தண்ணீரை திறந்துவிட நான் ஆணையிட்டுள்ளேன். இதனால், விழுப்புரம் மாவட்டம், திண்டிவனம் மற்றும் வானூர் வட்டங்களுக்குட்பட்ட 7 கிராமங்களில் உள்ள 1650 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும் என்பதை நான் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், விவசாயப் பெருமக்கள் நீரை சிக்கனமாக பயன்படுத்தி, நீர் மேலாண்மை மேற்கொண்டு உயர் மகசூல் பெற வேண்டுமாய் அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

**K. பழனிசாமி**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**